Nallur Branch

# எந்த அடிப்படையிலும் வடக்கு கிழக்கு இணைப்பு பேச்சுக்கு இடமில்லை என்று ஜனதிபதி அறிவிப்பு

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 23-7-86 புதன் (அடி 7 தலை 15) முழக்கம் 169

கூட்டணியினர் நேற்று மூன்று மணித்தியாலங்களாக ஜனதிபதி ஜெயவர்த்தனவுடன் மிகவும் அந்தரங்கமான முறையில் நடத்திய பேச்சுவார்த்தையின் போது "எந்த அடிப்படையிலும் வடக்கு கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று ஜனதிபதி திட்டவட்டமாகத் தெரிவித்ததாகத் தெரியவந்துள்ளது. தனது இந்த முடிவைத் தாம் ஏற்கனவேயே இந்திய அரசுக்குத் தெரிவித்துவிட்டதாகவும் ஜனதிபதி இங்கு சுட்டிக்காட்டினராம். நேற்றுப் பிற்பகல் நாலரை மணிமுதல் ஏழரை மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது. கடந்த இரு தினங்களாக தங்களைச் சந்தித்த கிழக்கிலங்கை முஸ்லிம் அமைப்புகள் இரு மாகாணங்களும் ஒன்ருக இயங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதை கூட்டணியினர் ஜனதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனராயினும், ஜனதிபதி அதுசம்பந்தமாக எந்தப் பதிலையும் அளிக்கவில்லையென்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். "எந்த வகையிலும் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை; அன்று இருந்த நிலையிலேயே இன்றும் இருப்பதாக அவர் மேலும் சொன்னர். நேற்று இரவும் கூட்டணியினர் இரண்டு முஸ்லிம் குழுக்களுடன் தனித்தனியாகப் பேச்சு நடத்தினர்.

# மாமடுவ கண்ணிவெடியில் சிக்கி
# 33 சிங்கள பயணிகள் மரணம்

## உருக்குலைந்த நிலையில் 26 சடலங்கள் மீட்பு
## அனுராதபுர ஆஸ்பத்திரியில் 13 பேர் அனுமதி

(வவுனியா)

வவுனியாவிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள கச்சைக்குடி என்ற இடத்திலிருந்து வவுனியா நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று நேற்றுக்காலை கண்ணிவெடியில் சிக்கியதால் மொத்தம் முப்பத்திரண்டு பிரயாணிகள் மரணமானதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. இதில் இருபத்தாறு பேர் ஸ்தலத்தில் பலியானதாக தெரிவிக்கப்பட்டது.

மாமடுவ என்ற இடத்தில் இடம்பெற்ற இத்தாக்குதலில் மரணமானவர்கள் சிங்களக் குடியேற்ற விவசாயிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இனம் தெரியாதவர்களால் புதைத்து வைக்கப்பட்ட கண்ணிவெடியில் அகப்பட்ட பஸ் தூள் தூளாகச் சிதறியதாகவும், ஸ்தலத்தில் மரணமானவர்களின் சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு அங்கங்கள் உருக்குலைந்து சிதறிக் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த பதினெட்டுப்பேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செலலப்பட்டனர். இவர்களில் ஐவர் அங்கு மரணமானுர்கள்.

வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களிலும் ஒருவர் மரணமானுர்.

குறிப்பிட்ட பஸ் இ. போ. ச. வுக்குச் சொந்தமானதென்றும், அதன் சாரதியும் மரணமானதாகவும், அவர் தமிழர் எனவும் பிந்திவந்த ஊர்ஜிதப் படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

விசேஷ ஆயுதப்படையினர் சம்பவம் நடந்த இடத்துக்கு உடனடியாக அனுப்பப்பட்டனர்.

## மக்கள் குறைகளை கவனிக்க பலாலியில் ராணுவ அதிகாரி

யாழ். குடாநாட்டிலுள்ள பொது மக்களின் குறைபாடுகளை கவனிப்பதற்காக பலாலி இராணுவ முகாமிலுள்ள கேர்ணல் சி. ஜே. அபயரட்ண நியமிக்கப்பட்டுள்ளதாக பிரிகேடியர் எச். எப். ரூபசிங்க அறிவித்துள்ளார்.

கேர்ணல் சி. ஜே. அபயரட்ணவுடன் பொதுமக்கள் தொடர்பு கொள்வதாயின் பாதுகாப்பு படை தலைமைச் செயலகம் (யாழ்.), இராணுவ முகாம், பலாலி, வயாவிளான் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் அவருடைய தொலைபேசி இலக்கம் கொழும்பு – 33611, யாழ்ப்பாணம்– 23380 அல்லது 24451 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். முஸ்லிம் பகுதியில நேற்று திடீர் தாக்குதல்

யாழ். முஸ்லிம் பகுதியிலுள்ள பல வீடுகளும், கடைகளும், நேற்று நண்பகல் ஆயுதங்களுடன் சென்ற கும்பல் ஒன்றினல் அடித்து உடைத்துச் சேதப்படுத்தப்பட்டன. வீடுகளிற்குள்ளும் கடைகளிற்குள்ளும் இருந்த பொருட்கள் உடைத்து நொருக்கப்பட்டு வீதியில் போட்டு எரிக்கப்பட்டன. பெருமளவு ரொக்கப் பணமும் நகைகளும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன.

வாள், கத்தி, பொல்லு, போன்ற ஆயுதங்களுடன் சென்ற கும்பலொன்றே தாக்குதல்களை மேற்கொண்டதாம்.

இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார். சேதமடைந்த கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமானம் சுமார் முப்பது லட்சம் ரூபா இருக்கலாம் என மதிப்பிடப் படுகிறது. கடைகள், வீடுகள் ஆகியனவும் சேதப்படுத்தப் பட்டுள்ளன. பல இடங்களில் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

## ஊர்வலமும் ஹர்த்தாலும்

கடந்த மாதம் முஸ்லிம் பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சு படுகொலைச் சம்பவத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்குமாறு கோரி யாழ். முஸ்லிம் பகுதியைச் சேர்ந்த சுமார் இரு நூறு பேர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நேற்றுக் காலை நடத்தினுர்கள்.

முஸ்லிம் பகுதியிலுள்ள ஒஸ்மானியாக் கல்லூரி முன்பாக ஆரம்பமான இவ் ஊர்வலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை நோக்கிச் சென்றது.

ஊர்வலத்தில், "குற்றவாளிகளுக்குதண்டனை வழங்க ஏன்

—6ஆம் பக்கம் பார்க்க

## பரந்தனில் நேற்று
## யாழ். வந்த பஸ்களுக்கு சீருடையினர் கல்வீச்சு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பயணிகளுடன் நேற்றுவந்த தனியார் பஸ்கள் மீது பரந்தனில் சீருடையினர் கல்வீசித் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபவனியாகவும், வாகனங்களிலு சென்ற சீருடையினர் மீது போராளிகள் தாக்குதல் மேற்கொண்டதில் அவர்கள் திரும்பிச் செல்ல நேரிட்டது. இவ்வாறு திரும்பிச் செல்லும்போதே வழியில் அகப்பட்ட பஸ்களின் மீது அவர்கள் கல்வீசித் தாக்கினுர்களாம்.

இதனுல் சில பஸ்களின் கண்ணுடிகள் உடைந்த போதிலும் பயணிகளுக்கு காயமெதுவும் ஏற்படவில்லை.

## யாழ்- இரத்த வங்கிக்கு முந்நூறுதொண்டர்பட்டியல்

யாழ். அரசினர் வைத்தியசாலையில் ஏற்படும் அவசர இரத்தத் தேவையினை ஈடு செய்வதற்காக புதியதொரு 'தொண்டர் சேவைத் திட்டத்தினை' அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்படி இரத்தம் வழங்க சம்மதமான சுமார் முன்னூறு பேர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவிருக்கின்றது.

செங்கமாரிநோயால் பாதிக்கப்படாத எவரும் இத்தொண்டர் பட்டியலில் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். அவசர இரத்தத் தேவையேற்படும்போது மட்டும் இவர்கள் அழைக்கப்பட்டு

—6ஆம் பக்கம் பார்க்க

## கூட்டணிக் குழுவினர்
## நாளை காலை ஸ்ரீமாவோவுடன் சந்திப்பு!
## பிற்பகல் தமிழகம் பயணமாவர்

ஜனதிபதியுடன் பேச்சுக்களை முடித்துக் கொண்டு நாளை வியாழக்கிழமை தமிழ்நாடு சென்று அங்கு போராளிகளுடனும், மற்றும் தமிழ்த் தலைவர்களுடனும் ஜனதிபதியுடன் தாம் நடாத்திய பேச்சுக்கள் பற்றி ஆராயவிருப்பதாக தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் திரு மு. சிவசிதம்பரம் நேற்று ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

தமிழ்நாடு சென்று அங்குள்ளவர்களுடன் பேசிய பின்பு மீண்டும் இங்குவந்து பேச்சுக்களை நடாத்தவுள்ளதாகவும் சொன்ன திரு. சிவசிதம்பரம், நாளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடனும் இனப்பிரச்சினை, மற்றும் அரசின் மாகாண சபைகள் பற்றி பேசவிருப்பதாகவும், இனப்பிரச்சினை தீர்வுக்கு சுதந்திரக் கட்சி ஆதரவு தருமாறு திருமதி பண்டாரநாயக்காவை கேட்கவுள்ளதாகவும் சொன்னுர்.

தமது பேச்சுக்களில் சில துறைகளில் முன்னேற்றம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ்தேவி வவுனியா வராது

கொழும்பில் இருந்து வவுனியா வரையும் நடைபெற்று வரும் யாழ்தேவி ரயில் சேவை காலவரையின்றி இடைநிறுத்தி வைக்கப்பட்டதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது. இதன்படி இன்று முதல் மீண்டும் இச்சேவை அனுராதபுரம் வரையுமே நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

## 29 நாடுகள் பகிஷ்கரிப்பு

காமன்வெல்த் அமைப்பின் 49 நாடுகளில் நேற்றிரவுவரை 29 நாடுகள் நாளை எடின்பரோவில் ஆரம்பமாகும் காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டை பகிஷ்கரிப்பதென்று அறிவித்துள்ளன.

## பருத்தித்துறையில் மோதல் ஷெல் தாக்கி மூவர் காயம்

(புலோலி)

பருத்தித்துறை கூட்டு பாதுகாப்பு முகாமிலிருந்து நேற்றுக்காலை வெளியே வரமுற்பட்ட ராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே நடைபெற்ற நேரடி மோதலில் பல ராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போராளிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத ராணுவத்தினர் முகாமிற்குள் திரும்பி அங்கிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல்களை

—6ம் பக்கம் பார்க்க

## சவூதி அரேபியாவில்
# வேலை வாய்ப்புகள்

கிளினேர்ஸ், ட்றைவேர்ஸ், மெக்கானிக்ஸ், பிளம்பர்ஸ், A/C ரெக்னிசியன்ஸ் கிளார்க்/டைப்பிஸ்ட் பதவிகளுக்கான பயண ஒழுங்குகளுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். 10 நாட்களில் பயண ஒழுங்குகள். பாஸ்போட், ஆறுபடங்களுடன் நேரில் வரவும்.

அச்சுவேலியில்:
மனேஜர்,
லாலா சோப்,
அச்சுவேலி.

சுழிபுரத்தில்:
K. LINGAM,
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

R/24087

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

★ சுதர்சினி ★

அனலைதீவு, 6-ம் வட்டாரத்தைச்சேர்ந்த தெய்வேந்திர குமாரன் ரஞ்சினிதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி சுதர்சினி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (23-7-86) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தா அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஜெர்மன் பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணர், தம்பி, சுவிஸ் மாமா, அத்தை, கனடா சித்தப்பாமார், சுவிஸ் சித்தப்பா, அன்ரிமார் அனைவரும் ஐயனார் அருள்பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

R/24078

# வெளிவாரிப்பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1987/88

பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகங்களின் பாட நெறிகளான

- கலைமாணி B.A.
- விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) B.Sc
- சட்டமாணி LL.B
- வணிகமாணி B.Com.

க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அல்லது பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களையும் விண்ணப்ப படிவங்களையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 29-8-1986.

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர்களின் கவனத்திற்கு:- ஸ்ரான்லி வீதியில் பட்டப்படிப்புகள் கல்லூரி தவிர வேறு கிளை நிறுவனங் கிடையாது என்பதனை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

R/24084

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
21-11-1962



உதிர்வு:
23-6-1986

## செல்வி த. யசிந்தா

சின்ன வயதில்—எம்மைச் சிரிக்க வைத்த நீ அன்னையை, தந்தையை, அன்புத் தம்பிகளை, அக்காவை, தங்கைகளை, அத்தானை, அம்மம்மாவை, சித்தப்பாவை, சின்னம்மாவை, அண்ணமாரை, அண்ணிமாரை, அக்கா பிள்ளைகளை, உறவினர்களை, நண்பர்களை இந்த வயதில் துயர வைத்து இறைவனடி சென்றுவிட்டாயே!

உமது ஆத்ம சாந்திக்காக மேல் கூறியவர்கள் யாவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

எனது மகளின் ஈமக் கிரியைகளில் பங்குபற்றிய சகலருக்கும் நன்றிகள். அத்தோடு மகளின் திருப்பலிப் பூசை பரி. கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்தில் 23-7-86 காலை 7 மணிக்கு நடைபெறும். சகலரும் கலந்து கொண்டு பிரார்த்திக்கும்படி மிகவும் பணிவன்புடன் தெரிவிக்கின்றேன்.

அ. தம்பையா குடும்பத்தினர்

இல 21, இராசசிங்கம் வீதி,
யாழ்ப்பாணம்.

R/24081

# பிறந்த நாள் வாழ்த்துகள்

அனலைதீவு ஆறும் வட்டாரம், தெய்வேந்திரகுமாரன் ரஞ்சினிதேவி தம்பதியின் மகள் சுதர்சினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

வேலணை கிழக்கு, மகேந்திரன் அம்பிகாவதி தம்பதியின் மகள் மேனகா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

காரைநகர் சந்திரத்தை, செல்வராசா மனோன்மணி தம்பதியின் மகன் உதயரூபன் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## அந்த அடையாள அட்டையால் வந்த அவஸ்தை

(நெடுந்தீவு)

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குப் பிரயாணத்தை மேற்கொண்ட பிரயாணிகள் நயினதீவுத் துறைமுகத்தில் கடற்படையினரின் சோதனைக்காக இறக்கப்பட்ட வேளையில், சோதனைக்குட்படுத்தப்பட்ட ஆசிரியர் ஒருவருக்குச் சோதனைக்கு மேல் சோதனை ஏற்பட்டது.

ஆசிரியர் தன்னுடன் எடுத்து வந்த பிரயாணப் பையில் அவருக்கு அறிமுகமில்லாத ஒருவரின் அடையாள அட்டையும் இருப்பதாகக் கூறிக் கடற்படையினரால் சிறிது நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டாராம்.

குறிப்பிட்ட அடையாள அட்டையைக் காட்டி அதிலிருந்தவரை அறிவீரா? என விசாரிக்கப்பட்டதாம். அது கண்டு அதிர்ச்சியுற்ற ஆசிரியர் அவ்வடையாள அட்டை குறித்து எதுவும் தெரியாதெனக் கூறியதையடுத்து விடுவிக்கப்பட்டார். விசாரிக்கப்பட்ட அடையாள அட்டைக்குரியவர் ஒரு பல்கலைக்கழக மாணவன் எனவும் கூறப்பட்டதாம். சோதனைக்குள்ளாகிய ஆசிரியர் யாழ். பண்ணைப் பாலம் மூடப்பட்ட பின்னர் முதற் தடவையாக நெடுந்தீவுக்குக் கடமைக்கு வரும்போது இச்சோதனை ஏற்பட்டதால் தொடர்ந்து பிரயாணம் செய்ய அஞ்சுகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஓராண்டு நினைவஞ்சலி



முத்துச்சாமிக்குருக்கள்
சர்வேஸ்வர சர்மா
(வருமானவரி அலுவலர்)

தோற்றம்:
9-3-1930
மறைவு:
2-8-1985
திதி:
23-7-86 இன்று

என் நெஞ்சில் நிறைந்த தெய்வமே! இன்றும் என்றும் தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

— மனைவி விமலா

B/1428

# பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர்: ஆண் கூலியாட்களுக்கு உடனடி வேலைவாய்ப்புண்டு.

டுபாய்: ஆண் கூலியாட்கள்.

சவூதி: 25 வயதுக்கு மேற்பட்ட கூலியாட்களுக்கு OPEN VISA உடனடிப் பயண ஒழுங்கும் :21 வயதுக்கு மேற்பட்டவர்கட்கு 2 வாரத்துக்குள் பயண ஒழுங்கும் செய்து கொடுக்கப்படும்.

டென்மார்க், கனடா செல்பவர்கட்கும் உடன் பயண ஒழுங்கு செய்யப்படும்.

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு வீட்டுப் பணிப்பெண்கள் வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

பாஸ்போர்ட், பொண்ட், விசா, ரிக்கற் ஆகிய வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

T. துரைசிங்கம்
(மகளிர் கல்லூரிக்கு அருகாமை)
ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம் டுவில்,
சுன்னாகம்.

R/24086

# பிரயாண ஒழுங்குகள்

★ கனடா

★ டென்மார்க்

★ சவூதி அரேபியா

(அ) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வர்.

(ஆ) சவூதி அரேபியாவுக்கு (தொழிலாளர்-Labourers) செல்ல விரும்புவோருக்கு 22ம், 23ம், 24ம் திகதிகளில் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(இ) கனடா, டென்மார்க், சவூதி ஆகிய நாடுகளுக்கு பாஸ்போட், முற்பணம் கொடுத்தவர்கள் 21, 22ம் திகதிகளில் காரியாலயத்தில் சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு:

N. BALA

பஸ் வழி இல:
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

R/24077

## வெளிநாட்டு
# பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவிற்கு உடனடியாக தொழிலாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் எதுவித இடையூறுமின்றி நேரடியாக உடன் அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவிற்கு ஆஸ்பத்திரி கிளினர், ஏர்ப்போட் கிளினர், ஹோட்டல் கிளினர். போக விரும்புவோர் 26ஆம் திகதிக்கு முன்பாக பாஸ்போர்ட் ஆறு புகைப் படங்களுடன் தொடர்பு கொள்ளவும். மற்றும் பாஸ்போர்ட், பொண்ட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

இ. தேவராஜா,
அச்சுவேலி தெற்கு.
(அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு அருகாமை)

R/24073

## கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி

# பாட நூல்களின் புதிய இணைப்பு விரைவில் வெளி வரவுள்ளன!

யாழ்- மாவட்டத்தில் ஆரும் ஆண்டு முதல் பத்தாம் ஆண்டு வரையிலான வகுப்புகளுக்கு தேவையான கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்குரிய பாட நூல்கள் இது வரை இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

அரசாங்க நூல் வெளியீட்டுத் திணைக்களம் தமிழில் நூல்களை அச்சடிப்பதிலுள்ள சில தடங்கல்களே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அமைச்சுடன் தொடர்பு கொண்டு புதிய பாடப் புத்தகங்களை அனுப்பி வைக்க முடியாவிட்டாலுங்கூட சென்ற வருடத்தை விட இவ்வருடம் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள புதிய இணைப்புகளை மட்டுமாவது அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

புதிய வருடம் ஆரம்பமாகி ஆறு மாதங்கள் பூர்த்தியாகியுள்ள போதிலும் புதிய பாடப் புத்தகங்கள் மேற்படி மாணவர்களுக்கு வழங்கப்படாததால் அம் மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உதவி ஆணையாளர் வேண்டுகோள்:

# வர்த்தகர்களின் மோசடியை கண்டுபிடித்தல் அவசியம்

(பண்டத்தரிப்பு)

நிறை குறைந்த படிகளுக்கு நட்சத்திர சீல் வைத்து மீண்டும் வர்த்தகர்களிடம் கொடுப்பதை விட அவற்றை பறிமுதல் செய்வது பாவனையாளரை சுரண்டல், அபகரிப்பில் இருந்து பாதுகாக்க சிறந்த முறையாகும் என யாழ்ப்பாணம், உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. சி. த. மார்கண்டுவால் ஒழுங்கு செய்யப்பட்ட பாவனையாளர் சங்கத்தில் பதவிவகிப்போருக்கான பயிற்சி வகுப்பில் கலந்துரையாற்றிய வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்தியலிங்கம் தெரிவித்தார்.

சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில்காலையிலிருந்து பிற்பகல் வரை இக் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. சி. த. மார்க்கண்டு தமது உரையில் பாவனையாளர் சங்கங்கள் சிரமம் பாராது இன்றைய இக்கட்டான காலக் கட்டத்தில் அப்பாவி மக்கள் கொடுக்கும் பணத்திற்கு சரியான அளவு, தரமான பொருட்கள். கிடைக்கச் செய்ய வேண்டும்.

படித்தவர்கள் சமூதாயத்தில் அந்தஸ்துள்ளவர்களால் நிர்வகிக்கப்படுவது பாவனையாளர் சங்கம். அது மட்டு மல்ல அரசியல் கலப்பற்றது. எனவே பல்துறை பிரமுகர்கள் அங்கம் வகிக்கும் இப் பொது நல நிறுவனம் தப்பாமல் பொது நன்மைக்காக சிரமப்படவும் தியாகஞ் செய்யவும் வேண்டும் என்றார்.

இன்று பல சில்லறைக்கடைகளில் இருத்தல் அவுன்ஸ் படிகள், போத்தல் கலன் அளவைகள், கொத்து சுண்டுமுறைகள், யார் முழக்கோள்கள் பாவனையில் இருக்கின்றது. இதனால் மீற்றர் விலை சொல்லி யார் அளவு இப்படி பல மோசடிகள் நடைபெறுவதாக தகவல்கள் கிடைக்கின்றன. இவை உண்மையா என அந்தந்தப்பகுதி பாவனையாளர் சங்கங்கள் அறிந்து எமது திணைக்களத்திற்கு அறிவித்தால் நாம் திடீர் பரிசோதனை மேற்கொண்டு தவறுகளை திருத்துவோம். நாம் உங்கள் பகுதிக்கு வரும்போது கிராம சேவகர், பாவனையாளர் சங்கங்கட்கும் அறிவிப்போம் என்றார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்தியலிங்கம் தலைமையில் பயிற்சி வகுப்பு நடைபெற்றபோது சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்செல்வி சாந்தினி சுப்பிரமணியம் அவர்களும் பிரசன்னமாக இருந்தார்.

## பெற்றோர்களுடைய

# ஒத்துழைப்பு இருந்தாலே சிறிய பாடசாலை வளரும்

(சரசாலை)

'பெரிய பாடசாலைகளில் இருக்கும் வசதிகளில் பத்திலொரு பங்கு கூட சிறிய பாடசாலைகளில் இருப்பதில்லை. வசதிகள் சேவைகள் கட்டணங்கள் கூட அறவிட முடியாத ஏழைக் குழந்தைகளே இங்கு கல்வி கற்கின்றனர். ஒரு கிணற்றை இறைக்க வேண்டுமென்றாலும் பெற்றோரின் உதவி தேவைப்படுகிறது வேலியடைத்தல் முதலான வேலைகளைக் கூட பெற்றோரின் பங்களிப்பின்றி செய்யமுடியாது.'' எனவே உங்களுடைய பூரண ஒத்துழைப்பை எமக்கு வழங்குதல் வேண்டும்.

இவ்வாறு யா/ கெருடாவில் சரஸ்வதி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றியபோது மேற்படி பாடசாலை அதிபர் திரு ம. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''இன்றைய காலத்தில் எமது தேவைகளை இயன்றளவு நாமே நிறைவேற்றவேண்டும். அதற்கு பெற்றோர் ஒத்துழைப்பும், நல்லெண்ணம் கொண்டோரின் ஒத்துழைப்பும் அவசியமாகும். பெற்றோர், பிள்ளைகளை பாடசாலைக்கு ஒழுங்காகவும், துப்புரவாகவும் அனுப்புதல் நல்லதாகும். அப்படி அனுப்புவதோடு நின்றுவிடாது பிள்ளைகளின் நிலையை பாடசாலைக்கு பெற்றோர் வந்து அறிந்துசெல்லுதல் வேண்டும். இதன் மூலம் பல விடயங்கள் நிறைவேறும்'' என்றார். நடப்பு வருட புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு: தலைவர்: திரு. ம. சபாரத்தினம் (அதிபர்), உபதலைவர்: திரு. க. சிவசுப்பிரமணியம், செயலாளர்: திருமதி க. துரைராசா (ஆசிரியை), உபசெயலாளர்: திரு. சி. சச்சிதானந்தம் (ஆசிரியர்), பொருளாளர் திரு. சி, நாகலிங்கம்(ஆசிரியர்) நிர்வாக குழு: திருமதி சி. மகேஸ்வரி, திருமதி ச. சிவலோகநாயகி, திருமதி செ. செல்லத்துரை, திருமதி செ. சீதாதேவி, திருமதி யோ. கமலாதேவி, கணக்காய்வாளர்: திருமதி சி. சித்திராதேவி.

## ஆசிரியரின் குறிக்கோள்

# மாணவரின் நலனில்தான் நிலைத்திருக்க வேண்டும்

(சுன்னாகம்)

கிராமப்புறச்சூழலில் பின் தங்கிய நிலையிலுள்ள மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் அக்கறை கொண்டியங்கும் சிலபாடசாலைகளில் திறமையான நிர்வாகத்தினால் மிக உயர்ந்த நிலக்கு வந்துள்ள இப்பாடசாலையின் வைபவத்தில் பங்குபற்றுவதில் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு கல்விக் கண்காட்சியின் நோக்கம் நிறைவேறத்தக்கதாக அமைந்த இக்கண்காட்சியையும் திறந்து வைத்ததில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மாணவர்களின் ஆக்கங்களை கண்டு அதிசயிக்கும் பெற்றோரை அடிக்கடி பாடசாலைக்கழைத்து அவர் தம் பிள்ளைகளை அவர்களின் செயற்பாடுகளின் மூலம் உணரவைக்கும் தருணங்கள் பல ஆக்கிக் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள பிரதமகல்வி அதிகாரி திரு வே. தங்கராசா பிரதமவிருந்தினராக இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை கல்விக் கண்காட்சியைத் திறந்து வைத்தபின் அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் பலதுறைத் தொழிற்பாடுகளிலும் இப்பாடசாலை சிறந்து விளங்குகிறது. யாழ். கல்வித்திணைக்கள உள்ளகக் கணிப்பீட்டின் பிரகாரம் சிறப்பாக இயங்கும் மூன்று பாடசாலைகளில் இதுவுமொன்றாகும். கற்றலுக்கும், கற்பித்தலுக்கும், மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கும் இவ்விதமான கல்விக்கண்காட்சி உதவி புரிகிறது. மாணவரின் அசைவாட்டத்தால் உண்டாகும் கருத்துப்படிவங்கள் ஏற்பட பாடசாலைகளில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்'' என்றார்.

கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் பேசுகையில், பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை என்ற நிலைமாறி மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டும் அதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் உதவி செய்தல் வேண்டும். பயிற்சிக் காலங்களில் பெற்ற அனுபவங்களை வகுப்பறையில் பிரயோகிக்க வேண்டும். மேலதிகாரிகளுக்காக ஆசிரியர்கள் செயல்படுவதை தவிர்த்து புதிய கல்வித் திட்டம் வெற்றிபெறுவதற்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும். சரியானமுறைச் செயற்பாடில்லாவிடின் புதிய கல்வித்திட்டம் படுதோல்வியடைய நேரிடலாம். இவ்வாறான நிலை சில பாடசாலைகளில் உருவாகியுள்ளதையும் அவதானிக்க முடிவது கவலை தருகிறது,' என்றார். அதிபர் நன்றியுரைநிகழ்த்தினார்.

## முருகையன் சொல்கிறார்:

# இலக்கியச் சர்ச்சைகளை நான்கு வகைப்படுத்தலாம்

சங்ககால இலக்கியங்களிலும், சங்ககாலப் புலவர்களிடையேயும் இலக்கியச் சர்ச்சைகள் இடம்பெற்றுள்ளது. இதற்கு சான்றாக புகழேந்திக்கும் ஒட்டக் கூத்தருக்கும் இடையே இடம்பெற்ற வலுவான இலக்கிய சர்ச்சைகளை எடுத்துக் கூறலாம்.

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க நோன்மதிக் கருத்தரங்கில் 'இலக்கியச் சர்ச்சை' எனும் பொருள் பற்றி உரையாற்றுகையில் கவிஞர் இ. முருகையன் கூறினார்.

சங்ககாலத்தில் இலக்கிய சர்ச்சைகள் சூடு பிடித்ததலை அக்காலத்து புலவர்கள் சிலேடை பேச்சுக்களில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளனர். இலக்கியத்தில்படைப்பாளியே சிறந்த விமர்சகராக இருக்க முடியும் என தெரிவித்த முருகையன் பாம்பின் கால் பாம்பு தான் அறியும் என தத்ருபமாக விளக்கினார். இலக்கிய சர்ச்சைகள் எங்கும் எந்த இடத்திலும் நடைபெற்று வந்தன. ஆனால் பல்வேறு தர நிலைகளில், மட்டங்களில் இவை இடம் பெற்றன.

இன்றைய நிலையில் இலக்கிய சர்ச்சைகளின் பங்களிப்பு மிக முக்கியமாக கருதப்படுகின்ற வேளையில் இவற்றை நான்கு வகையாக தரம் பிரித்து கையாளப்பட்டு வருகின்றது. பட்டிமன்ற மட்டம், புலமை போட்டி மட்டம், எழுத்தாளர் வீம்பு மட்டம், உண்மைத் தேட்ட மட்டம் என நான்காகப் பிரித்து இவைகளுக்குரிய விளக்கங்களையும் எடுத்துவியம்பிய அவர் சில்லறை சர்ச்சைகளுக்கு முக்கியம் கொடுத்து மிகைப் படுத்தத் தேவையில்லை என வலியுறுத்தினர்.

இக்கருத்தரங்கிற்கு தலைமை வகித்த கலாநிதி நந்தி பேசுகையில் புத்தக வெளியீடுகள் விற்பனைக்காகவும், விளம்பரத்திற்காகவும் நடைபெறுவது வழக்கமாகவிருந்தது. ஆனால் இன்றைய வெளியீடுகளை எழுத்தாளர்கள் விமர்சன கருத்தரங்குகளாக மாற்றி இலக்கிய சர்ச்சைகளை ஏற்படுத்தியும் வருகின்றனர் எனக் கூறினர்.

## பழைய மாணவர் பங்களிப்பும்

# பாடசாலையின் துரிதமான வளர்ச்சிக்கு உதவுகின்றது

(சுன்னாகம்)

பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது தொண்டாற்றவேண்டியது அனைவரது கடமையுமாகும். அதுவும் இன்றைய சூழ்நிலையில் பாடசாலையை வளர்த்தெடுப்பதில் ஒவ்வொருவரும் தம்மைப் பங்காளர்களாக்கிக் கொள்ளவேண்டும். பழையமாணவர்கள் அக்கறையுடன் செயல்படும் கல்லூரிகளே துரிதவளர்ச்சி காணுகின்றன. அவ்வாறான வளர்ச்சிக்கு இக்கல்லூரியும் நல்லுதாரணமாகின்றது.''

இவ்வாறு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிலும் நிறுவியவர் நினைவுநாள் வைபவத்திலும் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது கடமைபுரியும் ஒவ்வொரு ஆசிரியரும் தத்தமது கடமையில் கண்ணும் கருத்துமாயிருத்தல்வேண்டும். எவ்வித கருத்து வேறுபாடுமின்றி பாடசாலையின் வளர்ச்சியிலும், மாணவர்களின் நலன்களிலும் அக்கறையுடன் செயற்படவேண்டும், இப்பாடசாலையை நிறுவியவர் இதன் வளர்ச்சிக்கு எவ்விதமாக அயராது உழைத்து வளர்த்தெடுத்தாரோ அவர்வழி பின்பற்றி நாமும் இதன்வளர்ச்சிக்கு எம்மால் முடிந்தனவெல்லாம் செய்து வரவேண்டும்.''

நிறுவியவர் நினைவுரையை நிகழ்த்திய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. ஆ. வேலுப்பிள்ளை தனது சொந்தக்கிராமத்துப் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றமடைய வேண்டுமெனவிரும்பி பாவலர் துரையப்பா இக்கல்லூரியை நிறுவினர். அவரின் ஒப்பற்ற சேவைக்காக எம்மாலானவற்றையெல்லாம் புரிந்து இக்கல்லூரியை திறம்படச் செயற்படவைக்கவேண்டும். நிறுவியதோடு அமையாது பாடசாலை வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்தவர் என்றார்.

கல்லூரி அதிபர் திரு. சி. நாகராசா வைபவத்திற்குத் தலைமைதாங்கினர்.

## மினிபஸ் சங்க தலைவர் மதிமுகராஜா பேச்சு:

# சிவில் நிர்வாகம் இல்லை; ஆனாலும் மக்களுக்கு சேவை

வடபிராந்திய மினி பஸ் சேவைச் சங்கங்களின் பொதுச் சபைத் தேர்தல் கடந்த சனியன்று நடைபெற்றபோது அதன் தலைவராக பஞ்சாயத்துகளின் அமைப்பாளரான திரு. பொன். மதிமுகராஜா ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டார்.

செயலதிபராக திரு. இ. செல்வராஜாவும், பொருளாளராக திரு. ஏ. தியாகராஜாவும், துணைத் தலைவராக திரு. மூ. சிவராஜாவும், துணைச் செயலாளராக திரு. ஏ. கனகசபையும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பொன். மதிமுகராஜா உரை நிகழ்த்துகையில், சிவில் நிர்வாகம் சீர்குலைந்த நிலையிலும் இந் நிறுவனம் இதுவரை மக்களுக்கு நற்சேவையாற்றி வந்துள்ளதென்றும், இந்த நிறுவனத்தின் வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டவர்கள் எவ்வித பிரதி உபகாரத்தையும் எதிர்பாராது பொதுச் சேவையையே நோக்காகக் கொண்டு செயற்படுகின்றனர் என்றும் கூறினர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக திரு. சு. சிவராஜா, திரு. செ. அரசலிங்கம், திரு. ஐ. காலிங்கநடனம், திரு. செ. மகாதேவன், திரு. செ. கேசவரத்தினம், திரு. வீ. நகேஸ்வரன், திரு. பொ. தம்பித்துரை, திரு. த. அ. தம்பித்துரை, திரு. கு. விமலதாஸ், திரு. கி. ஜெ. அற்புதநாதன், திரு. கு. சுரேஸ்குமார், திரு. வி. குமாரசாமி ஆகியோர் தெரிவாகினர்.

உதய சிந்தனை

பேச்சுக்களும், ஒப்பந்தங்களும் நேர்மையானவை என்று கூறமுடியாது. மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பதுவே நேர்மையின் முதல் சின்னம். -லிங்கன்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

23-7-86 புதன்கிழமை (அக்ஷய) ஆடி 7

# ஆயுதப்படையினரின் ஜூலை 'கின்னஸ்' சாதனை

ஜூலை என்றதும் தமிழர் படுகொலைகளே உடனடியாக நினைவுக்கு வரும்.

1983 ஜூலை மாதம் இடம்பெற்ற இனக்கலவரமும் தமிழர் படுகொலைகளும் மாறாத வடுக்களாக ஒவ்வொருவர் மனத்திலும் பதிந்து விட்டதே இதற்குக் காரணம்.

இச்சம்பவம் நடைபெற்று மூன்றாண்டுகள் முடிவடைந்து விட்டன. ஆனால் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் காணப்படவில்லை.

இன்னமும் படுகொலைகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன.

1983 ஜூலை மாதத்துக்கு விட்டுக்கொடுக்காத வகையில், 1986 ஜூலை மாதத்தில் தமிழர் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன.

அன்று, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களுக்கு வெளியே தான் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆனால் இன்று, தமிழர்கள் தங்களின் சொந்த மண்ணில், தங்களின் காணிக்குள், தங்களின் வீட்டுக்குள் வைத்துக் கொலை செய்யப்படுகின்றனர்.

தமிழனாகப் பிறந்தவன் தனது சொந்த மண்ணிலேயே பாதுகாப்பாக வாழ முடியாது என்ற புதிய ஜனநாயக சுதந்திர ஆட்சி இந்நாட்டில் நிலவுகின்றது.

கடந்த முப்பத்தாறு மாதங்களாக இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் ஜெயவர்த்தன அரசு, இந்தக்காலப் பகுதிக்குள் ஏழாயிரத்துக்கும் அதிகமான தமிழர்களைக் கொன்று குவித்துள்ளது.

காணமல் போனவர்கள், காயப்பட்டவர்கள், வீடு, வாசல், சொத்துக்களை இழந்தவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத பெருந்தொகையினர்.

ஒவ்வொரு தமிழ்க்குடும்பமும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளை ஒரு புறத்தே முடுக்கிவிட்டு, மறு புறத்தே அரசியல் தீர்வு காண 'நடிக்கும்' அரசாங்கம் இந்த மாதத்தின் முதல் இருபது நாட்களிலும் இரு நூற்றுப் பதினான்கு தமிழர்களை கொலை செய்துள்ளது

தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்ற கொலைகள் இவை. மாவட்ட ரீதியாக புள்ளி விபரங்களைச் சேகரித்த தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இதனை வெளியிட்டுள்ளது.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த இந்திய தூதரகத்தின் அரசியல் செயலாளரிடம் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

மொத்தம் இருநூற்றுப் பதிநான்கு கொலைகளில், நூற்றைம்பதுக்கும் அதிகமானவை ஒரு வாரத்துக்குள் நடத்தி முடிக்கபபட்டவை.

சரியாகச் சொல்வதானால் கூட்டணிக்குழுவினர் கொழும்புக்கு வருகை தந்த ஜூலை 12ம் திகதிக்கும் 20ம் திகதிக்குமிடையில நூற்றைப்பதற்கும் அதிகமானோரின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது.

அடம்பன், மூதூர், நெடுங்கேணி, பாவற்குளம் ஆகிய இடங்களிலேயே கூடுதலான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்களின் போது, மேலும் சுமார் எண்பது பேர் காணமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடம்பனிலும், மூதூரிலுமே இவர்கள் காணமல் போயுள்ளனர்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்குக் கிடைத்த தகவல்களின்படி இவர்கள் காணமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படடுள்ள போதிலும், பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் படி இவர்களும்கூட கொல்லப்பட்டேயுள்ளனர்.

அடம்பனிலும், மூதூரிலும் காணமல் போனவர்களின் சடலங்கள் எரித்துக் கருக்கப்பட்டதைக் கண்டவர்கள் பலரின் சாட்சியங்களை நாம் ஏற்றேயாக வேண்டும்.

கொலைகள் நடந்து முடிந்த பின்னர், ''இது வரை நான் கேள்விப்படவில்லை; உரிய நடவடிக்கை எடுக்கிறேன்'' என்று ''ஒல்ட் மான்'' கூறுவதில் பயனில்லை.

உயர் இராணுவ அதிகாரிகளை ஸ்தலத்துக்கு அனுப்பியதால் ஏதாவது பலன் கிடைத்ததா?

கூட்டணியினரின் பேச்சுவார்த்தைக்கு ஒரு சவால் நடவடிக்கையாகவே தமிழர் படுகொலைகள் திட்டமிட்டு கடந்த வாரங்களில் நடத்தப்பட்டதாக எவராவது கருதுவார்களானால், அதனை தவறாக எவரும் எடுக்கமுடியாது.

மொத்தத்தில் பார்க்கும் போது ஆயுதப்படைகள் தமிழர் கொலை விடயத்தில் இந்த மாதம் ஒரு 'கின்னஸ் சாதனை'யை உருவாக்கியுள்ளனர் என்று சொல்லலாம்.

நேற்றைய கட்டுரையின் தொடர் - பகுதி: 3

# கிழக்கு மாகாண பகுதிகளில் தாக்குதல்கள் பரவலான விதம்

புரண்ட்லின் கட்டுரையின் தமிழாக்கம்

'அரச வன்செயல்கள் இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு எதிராக, என்றும் போலவே, விளக்கம், விசாரணை, தண்டனைக்கு இடம் எதுவுமின்றி ஒரே தோரணையில்தொடர்கின்றன. (தமிழருக்கு எதிரான) இவ் வன்செயல் நாடகம் ஆட இலங்கை அரசு ஒன்றினால் மட்டும் தானா முடியும்? (எடுத்துக்காட்டாக நம்போன்ற) பிறராலும் பொது மக்கள்மீது வன்செயல் நாடகமாட முடியும். இச் ''செய்தி'' கொழும்பில் கிடைக்கும்படி செய்தல் இன்றியமையாதது. தலைநகரில் உருப்படியான, முக்கிய தாக்கம் ஏற்படுத்த வல்ல நிலைகுலைவு உண்டாக்கப்படுதல் வேண்டும். கொழும்பிலும் இதேபோன்ற ஒரு தாக்கம் நேரடியாக விளைந்தாலன்றி நிலைமை மாறப்போவதில்லை.' இங்ஙனம் எண்ணிய 'ஈரோஸ்' செயலில் இறங்கவும் துணிந்தது.

ஒரு புதிய தொடரான குண்டு வெடிப்புகள்: இங்ஙனமாக ஆரம்பமாயினவே, இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் தொடரான பல குண்டுவெடிப்புச் சம்பவங்கள். இவற்றுள் முதலாவது அனர்த்தம் 1986 மார்ச் மாதம் பதினெட்டாம் திகதியன்று இலங்கை அரசாங்க உடைமையாகிய கொழும்பில் அமைந்த சிலோன் ஒக்ஸிஜின் லிமிட்டெட் கம்பனியில் நேர்ந்தது. அதனைத் தொடர்ந்தது தலைமன்னாரில் ஏப்ரல் பத்தாந் திகதியக கண்ணிவெடிச் சம்பவம். அதன் விளைவாகப் பொலிசுப் பரிசோதகர் ஒருவர், ஒரு பொலிசுக் கொசுத்தாப்பு குடிமக்களில் ஒருவர், ஆகிய மூவர் மரணமாயினர்.

ஈரோஸ் ஈழம் புரட்சிகர அமைப்பினது அடுத்த குண்டு வெடிப்புத் தாக்குதலுக்கு இலக்காகியன. ஏப்பிரல் இருபத்தைந்தாம் திகதி அனுராதபுரத்தில் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியக் குதங்கள் ஆகும். இக் குண்டு வெடிப்பினால் மூண்ட தீ தொடர்ந்து மூன்று நாட்களாக விளாசி எரிந்தது ஒன்பது பௌஸர்களை நாசமாகி ஒன்பது ஆட்களையும் பலி கொண்டது. அரசாங்கத்திற்கு இதனால் முப்பத்தைந்து இலட்சம் இலங்கை ரூபா வரையில் இழப்பு விளைந்தது என மதிப்பிடப்பட்டது.

அங்கிருந்து, 'ஈரோஸ்' விடுதலை இயக்க நடவடிக்கைகளின் பருமனும் வீச்செல்லையும் ஒரே சீராக அதிகரிக்கலாயின. 1986 மே மாதம் மூன்றும் திகதியன்று கொழும்பிலுள்ள கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, இலங்கை அரசாங்க நிறுவனமாகிய எயர் லங்காவின் ற்ரைஸ்ரார் லோக்ஹீட் விமானமொன்று பாரிய அனர்த்தத்திற்கு உள்ளாயிற்று. அதன்மீது வைக்கப் பட்டிருந்த ஐம்பது கிலோகிறாம் 'டைனமைற்' வெடிமருந்தானது, ஓர் உப்பிப் பருத்த பென்ஸிலை இரு துண்டுகளாக முறிப்பதுபோல அவ் விமானத்தை இரு கூறுபடத் தகர்த்தெறிந்தது. பதினாறு உல்லாசப் பயணிகள் கொல்லப்பட்டனர். அவர்களிற் பெரும்பாலானோர் இந்து சமுத்திர மாலைதீவுகளில் தமது விடுமுறையைக் கழித்தற்காகச் சென்றுகொண்டிருந்த ஐரோப்பியர்களாவர்.

'எயர் லங்கா' விமானம் இரண்டு துண்டாகத் தகர்த்தெறியப்பட்டு, சரியாகத் தொண்ணூற்றாறு மணித்தியாலங்களின் (நான்கு நாட்களின்) பின்னர் 'ஈரோஸ்' தற்கொலைப்படை கொழும்பிலுள்ள மத்திய தந்தி அலுவலகத்தல் வெடிகுண்டுகளை வெடிக்க வைக்கும் செயலில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தது. இச்சம்பவத்தில் குடிசனங்கள் பன்னிருவர் இறந்தனர். அவர்களின் சடலங்கள் கோரமாகச் சிதைந்து சிதறுண்டிருக்கக் காணப்பட்டன. அது ஒரு மாடிக் கட்டடம். தகர்ந்து வீழ்ந்த சில மாடிகளில் எஞ்சியிருந்தவை நெளிந்து முறுக்குண்ட உலோகத்தாலான பாகங்களும், எரிந்து கருகிய மரத் தீராந்திகளும், இடம் பெயர்த்துக் கும்பலும் குவியலுமாகக் கிடந்த மக்கி, சுண்ணாம்புக் கலவையுமேயாகும்.

அடுத்து, 'ஈரோஸ்' இயக்கத்தின் செயற்பாட்டுக்களம், கிழக்கு மாகாணத்திற்கு மாறியது. அவ்வியக்கத்தின் அடுத்த 'டைனமைற்' தாக்குதலுக்கு இலக்கானது திருகோணமலை கொட் விரிகுடாவில் அமைந்த டோக்கியோ சீமெந்துக் கம்பனி ஆகும். யப்பானும் இலங்கையும் ஒன்றிணைந்து நடத்திவந்த இக்கூட்டு முயற்சியின் சீமெந்து உற்பத்தி அத்துடன் துண்டற நின்றுவிட்டமை ஒரு புறமிருக்க, குண்டு வெடிப்பினால் விளைந்த இழப்பு, முந்நூறு இலட்சம் இலங்கை ரூபா அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டது. 'சர்வதேசக் கூட்டுக்கம்பனிகள் எமது தாயகத்தின் மீது பிரயோகிக்கும் பொருளாதார நசுக்கல், சுரண்டல் ஆகியவற்றின் ஒரு சின்னமாகஇக்கம்பனி விளங்கியது ஆகவேதான் அது சுக்குநூறாகத் துவம்சம் செய்யப்பட்டது' என 'ஈரோஸ்' இயக்கப்பேச்சாளர்கள் எடுத்து விளக்கினர்.

இம்முறை, 'ஈரோஸ்' தமிழர் விடுதலை இயக்கம்தனது செயற்பாட்டுக் களத்தை மீண்டும் கொழும்புக்கு நகர்த்தியது. 1986, மே மாதம் முப்பதாம் திகதி, சம்பவம் நேர்ந்தஇடம், இலங்கைத் தரைப்படை, விமானப்படை ஆகியவற்றின் தலைநிலையங்களிலிருந்து இருநூறு மீட்டர் தொலைவுதானும் இராது. அவ்விடத்திலிருந்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் இல்லம் அமைந்த தூரம் இரண்டு கிலோமீட்டரிலும் பார்க்கக் குறைவே. குளிர்பானங்களைப்போத்தலில் அடைக்கும் 'சிலோன் கோல்ட்ஸ்ரோர்ஸ், (எலிஃபன்ற் ஹௌஸ்' எனவும் அதற்குப் பெயர்வழங்கும்) கம்பனியின் தொழிற்சாலை பலத்த குண்டு வெடிப்புக்கு இலக்காயிற்று. தொழிலாட்கள் ஒன்பது பேர் மாண்டனர்.

மே மாதம் முப்பதாம் திகதியாகிய அதே நாள், இலங்கையின் கிழக்கு மாகாணத்துத் திருக்கோணமலைப் பிராந்தியத்தினுள் மூதூருக்குக் கிட்டவுள்ள பாலத்தோப்பில் பலத்த கண்ணிவெடி அசம்பாவிதமொன்று இடம்பெற்றது.

'ஈரோஸ்' இயக்கம் 'பொறித்துவைத்த' ஒரு நிலக்கண்ணிவெடிக்குள் இலங்கை அரசாங்கத்தினது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து ('பஸ்'வண்டி) ஒன்று சிக்கிச் சிதறியது. அவ்வாகனத்தைப் பிரத்தியேகமாகத் தமக்கென அமர்த்தி வைத்துக்கொண்டு, அதிற் பிரயாணஞ் செய்து கொண்டு இருந்த இராணுவத்தினர் முப்பதுபேரளவில் மாண்டுமடிந்தனர்.

இலங்கைத் தீவின் தலைநகரம் கொழும்பு மாநகர் ஆகும். மறுநாளாகிய 1986, மே மாதம் முப்பத்தொராம் திகதி, மேற்கு மாகாணத்தின் கண்ணுள்ள தலைநகரிலிருந்து முப்பத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் புகைவண்டியொன்று குண்டுவெடிப்புக்கு இலக்காயிற்று. கிழக்கு மாகாணத்தில் அமைந்த மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த 'உதய தேவி' எனும் பெயர் கொண்ட புகைவண்டி வியாங்கொடையில் வைத்துச் சம்பவித்த குண்டு வெடிப்பினால் பலத்த சேதம் அடைந்தது. பொதிகளைச் சுமந்து செல்லும் வண்டித் தொடர்ப் 'பெட்டி'யினுள் வெடிகுண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அனேக இராணுவச் சிப்பாய்களும்('எஸ் ரி.எஃவ்' ஸ்பெஷல் ராஸ்க் ஃபோர்ஸ்') கடும்பணியாற்றும் விசேட படையினருமான அனேகர் அப்புகைவண்டித் தொடரிற் பிரயாணஞ் செய்து கொண்டு இருந்தனர். புகைவண்டியின் மூன்று 'பெட்டிகள்' தவிடு பொடி ஆகியமையின் பேரில், அரசின் இந்த இருபடைகளைச் சேர்ந்தோரும் குடிமக்கள் சிலரும் இறந்து பட்டனர்.

'ஈரோஸ்' ஈழம் புரட்சிகர அமைப்பானது தனது 'அகிலபகிரங்க வெளிப்படை' நடவடிக்கைகளை 1986 ஆம் ஆண்டின் தொடக்க நாட்களில் ஆரம்பிக்கலாயிற்று. இவ்வாண்டு ஜனவரி மாதம் பதினெட்டாம திகதியன்று, இலங்கைத்தீவின் வடகிழக்காக அமைந்த முல்லைத்தீவு கடலோரப் பட்டினத்தில் வைத்து எதேச்சையாக (தன்விருப்பப்படி) தகவல் சேகரிக்கும் பிரித்தானிய பத்திரிகையாளர் ஒருவரை இவ்வியக்கம் தடுத்து வைத்திருந்தது. அறுபத்திரண்டு வயதினரான பெனிலொப்பி ஈவா வில்லிஸ் இவ்வாறு சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டார். அம்மூதாட்டி சந்தேகத்திற்கு உரியவரே என்பதை 'ஈரோஸ்' நிரூபித்தும்விட்டது. சரியாக ஒருமாதம் கடந்தபின்பு, இலங்கைத்தீவின் வடக்கில் உள்ள தமிழ் அகதிகள் முகாம் ஒன்றில் வைத்து அப் பெண்மணி விடுவிக்கப்பட்டார். அவரைப் பொறுப்பேற்றற்கு எனப் பெயர் குறித்து சர்வதேச நிறுவனம் ஒன்றால் நியமிக்கப் பட்டிருந்த சன்ட்ரு சிங்கர் எனும் பெண்வசம் பெனிலொப்பி ஒப்படைக்கப்பட்டார்.

சன்ட்ரு சிங்கரை நியமித்த அனைத்துலகத்தாபனம், 'ஐ.சி.ஆர்.சி.' எனப்படும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் கமிட்டி (இன்ரர்நஷனல் கொமிற்றி ஒவ் த றெட் க்ரொஸ்') ஆகும். அக்கமிட்டியை இலங்கையில் இது விடயத்தில் பங்குபற்ற இயலாவண்ணம் இலங்கை அரசு விடாப்பிடியாக அதுநாள்வரை அனுமதி மறுத்திருந்தது. ஆயினும், பிரிட்

—5ம் பக்கம் பார்க்க

# சின்னஞ்சிறு செய்திகள்

## வழிபடுவோர் சங்கம்

நல்லூர் சட்டநாதர் நல்லை நாதசுவாமி ஆலய வழிபடுவோர் சங்க நிர்வாக சபை உறுப்பினராக பின்வருவோர் தெரிவாகினர். தலைவர் திரு. வ. பரமசிவம், உபதலைவர்: திரு. ஆ. செல்வரத்தினம், திரு சி. ஜெயபதி, செயலாளர்: திரு. பொ. தி. மார்க்கண்டு, உபசெயலாளர்: திரு. இ. சந்திரகுமார், பொருளாளர்; திரு. அ. வாமதேவன், உப பொருளாளர்: திரு. வீ. யோகரத்தினம், கணக்கு பரிசோதகர்: திரு வே. குமாரசாமி, திரு. கு. கிட்ணர்.

## மரம் நாட்டுவிழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் பண்டத்தரிப்பு சென். மேரிஸ் ஆலய வளவில் மரம் நாட்டு விழா சங்கத்தலைவர் திருமதி ஆர். ஜே. யேசுதாசன் தலைமையில் விழா நடைபெற்றது.

தொழிலதிபர் திரு. க. கனகராசா மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார். இறைவணக்கத்தைத் தொடர்ந்து திரு. ஆ. யேசுதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். செல்வி யே. சுனேந்திரா, செல்வி மே. ஆஷ ஆகியோர் மரம்பற்றிய பாடலை பாடினர். பாலர் பாடசாலை மாணவர் வரவேற்புப் பாடல் பாடி பிரமுகர்களை வரவேற்றனர். முதலில் திரு. கனகராசா மரம் நாட்டிவைத்தார். பின்னர் பங்குத்தந்தை வண. பிதா. ஜெயக்குமார், விவசாய நிர்வாக அதிகாரி திரு. ஏகாம்பரம், சங் சகோ. யூலாலி ஆகியோரும் மரம் நாட்டினர்.

## திருவிளக்கு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ இராசராசேஸ்வரியம்பாள் ஆலயத்தில் கடந்த வாரம் பிற்பகல் திருவிளக்குப் பூசை வழிபாடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

பெருந்திரளான சுமங்கலிகள் இத்திருவிளக்குப் பூசை வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

## புதிய நூல்

(சரசாலை)

பத்தாம் ஆண்டு மாணவர்களுக்கான சைவசமயம் என்ற புதிய நூலை சாவகச்சேரி ஸ்ராண்டபோட் கல்விச் சேவையினர் வெளியிட்டுள்ளனர் ஆசிரியர் திரு த. நாகேஸ்வரன் இதனை எழுதியுள்ளார். இந் நூலை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றார்கள்.

## பிரஜைகள்குழு உருவானது

(புலோலி)

பருத்தித்துறை கற்கோவளத்தில் பிரஜைகள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது இப் பிரஜைகள் குழுவின் தலைவராக திரு. என். செல்லையாவும், உபதலைவராக திரு வ. குழந்தைவடிவேலுவும், செயலாளராக திரு சி பரஞ்சோதியும், பொருளாளராக திரு. வ துரைசிங்கமும், செயற்குழு உறுப்பினர்களாக திரு. ச தேவதாஸன், திரு. க. சந்திரகாந்தன், திரு ந சிதம்பரநாதன், திரு. இ. ஹரிதாஸ், திரு. சி. சண்முகலிங்கம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## நற்பிரசாரம்

(சரசாலை)

சாவகச்சேரி இளைஞர் நல்வாழ்வுக் கழகத்தின் நற்பிரசாரங்கள் நுணுவில் கிழக்கு பஸ்தரிப்பு நிலையத்தில் காணப்பட்டன. அதில் காணப்பட்டனவற்றில் சில வாசகங்களாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவியுங்கள், கருத்தடையை நிராகரித்து பிள்ளைச் செல்வத்தைப் பெருக்குவோம், நஞ்சிலும் கொடியது மதுபானம் போன்றனவும் காணப்பட்டன.

## நாடகப் போட்டி

(சங்கானை)

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் பாடசாலைகள், பொதுநலக் கழகங்கள், சபைகள், நாடக மன்றங்கள் போன்றவற்றுக்கிடையிலான நாடகப் போட்டியை நடாத்த வட்டுக்கோட்டை -கலா நிலைய வெள்ளிவிழா அமைப்பாளரான முன்னாள் கல்லூரி அதிபர் திரு. க. கயிலாயநாதன் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார்.

போட்டி மனுக்களை கலா நிலைய முதல்வருக்கு அனுப்பி வைக்கவேண்டும்என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சீரிய பணி

(சங்கானை)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல வகையிலும் சிறந்து முன்னேற்றப் பாதையில் வீறுநடைபோட்டு துரிதமாக நடைமுறைகளைக் கவனித்து உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவுகளிலும், நுகர்வோரின் கஷ்டங்களையும் ஆராய்ந்து களைப்பதிலும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு சிங்காரம் தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை

## எர்ஷாட் கொழும்பு வருகிறார்

பங்களாதேஷ் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாட் எதிர் வரும் வியாழக்கிழமை கொழும்பு வருகின்றார்.

குறுகியகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு இவர் இங்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3 1/2 லட்ச ரூபா மாதாந்தம் நஷ்டம்

யாழ்.மாநகரசபை மின்சார மோசடி நடவடிக்கைகள் காரணமாக மாதாந்தம் சுமார் மூன்றரை லட்சம் ரூபாவை இழந்து வருகின்றது. சட்ட விரோத மின் இணைப்புக்கள் மீற்றர் மோசடிகள் காரணமாகவே இந்த நட்டம் ஏற்படுவதாக மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

## புலமைப் பரிசில்

(சங்கானை)

க. பொ. த. சாதாரணப் பரீட்சையின் அடிப்படையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1984ம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்றோர் விபரம் செல்விகள் ஏ. கல்யாணி, ஏ. ஷியாமலா, எஸ். கௌரியாம்பாள். செல்வன்கள் என். பவானந்தன், ரி. தர்மராஜசிங்கம், ரி. கதிர்வேல்.

நேபாள விஜயத்தின் போது ஜெயில்சிங் சொன்னார்:

பஞ்சசீலக் கொள்கை பரப்ப பாரதம்

# காலத்தின் சோதனைக்கு ஈடுகொடுத்து செயற்பாடு

(காத்மண்டு)

**"காலத்தின் சோதனைக்கு ஈடுகொடுத்து பஞ்சசீலக் கொள்கையைச் சகல நாடுகளிலும் பரப்பவே பாரதம் பாடுபடுகிறது." என்று ஜனாதிபதி திரு. ஜியானி ஜெயில்சிங் நேபாள மன்னர் பிரேந்திரா அளித்த விருந்துபசாரத்தில் நேற்று முன்தினமிரவு பேசுகையில் கூறினார்.**

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு அவர் இப்போது இங்கே வந்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "சகல நாடுகளினது சுயாட்சியையும், சம அந்தஸ்தையும் பாரதம் மதித்தே வருகின்றது. சமாதான சகவாழ்வுக்காக பாரதம் தொடர்ந்து குரலெழுப்பும்" என்றார்.

"தெற்காசியப் பிராந்திய நாடுகளிடையேநிலவவேண்டிய ஒத்துழைப்பையும் அவர் வலியுறுத்தினார்.

தமது நாட்டின் வறுமையை ஒழிக்க பாரதம் உதவ வேண்டுமென்று நேபாள மன்னர் இச் சந்தர்ப்பத்தில் பாரத ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

உலக சமாதானத்தின் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினார்.

இருநூறு வருட கால பழைமை வாய்ந்த அரண்மனைக்கும் ஜனாதிபதி விஜயம் செய்தார்.

நேபாளப் பிரதம மந்திரி திரு. செஸ்தா திரு. ஜெயில்சிங்குக்குப் பகல் போசனமளித்துக் கௌரவித்தார்.

நிக்கராகுவா

## ராணுவ ஹெலிகொப்டர் நதியில் வீழ்ந்து பலர் பலி

(லண்டன்)

நிக்கராகுவா இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று நதியில் வீழ்ந்ததால் அதில் பயணம் செய்த 24 பேரில் 23 பேர் மடிந்ததாக அறிவிக்கப்படுகிறது.

நிக்கராகுவாவின் கிழக்குப் பகுதியில் வெள்ளத்தில் சிக்கித் தவித்தோரை மீட்கச் சென்ற போதே ஹெலிகொப்டர் இவ் விபரீதத்திற்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நடுவானில் எஞ்சின் கோளாறு ஏற்பட்டதாகவும் அதனால் விபத்துச் சம்பவித்ததாகவும் மேலும் தகவல் வெளியாகியுள்ளது.

அணுகுண்டு தயாரிப்பு:

## பாரத நிலைப்பாடு என்ன? அத்வானி கேட்கிறார்

(புதுடில்லி)

அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபடப் பாகிஸ்தான் முனைகிறது என்ற அமெரிக்காவின் கூற்றையிட்டு பாரதம் உஷாரடைய வேண்டுமென ஜனதா தலைவர் திரு எல். கே. அத்வானி வற்புறுத்தியுள்ளார்.

"அணுகுண்டுத் தயாரிப்பு விடயத்தில் பாரதம் தன் நிலையைத் தெளிவு படுத்த வேண்டும்" என அவர் கேட்டுக் கொண்டார்.

சமீபத்தில் அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் பிரதமர் திரு. ஜூனெஜோ விஜயம் செய்த போது, பாகிஸ்தான் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டால் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகள் நிறுத்தப்படும் என ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## 37ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் திருமதி முருகேசு பவளம்மா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13-1-1912 | 17-6-86 |



அன்பை முதலாய் எமக்காக்கி அரிய மொழியாம் அமுதூட்டி இன்பம் இசைய வளர்த்த எங்கள் அன்புத் தாயாரே! தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்த இந்த 37ம் நாளில் தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

கண்டி இல்லம்
வேலணை மேற்கு,
வேலணை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

R/24088 தகவல்: A. சதா

## ஆ. தே. காங்கிரஸ் நம்பிக்கை

(லண்டன்)

தென்னாபிரிக்கா மீது பலமான பொருளாதாரத்தடைகளை விதிக்கும் விடயத்தில் பாரதம் தொடர்ந்தும் உறுதியுடனே இருக்கும் என்று ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக அது பாரத வெளியுறவு இணையமைச்சருக்குச் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

## அமெரிக்காவில் பூமியதிர்ச்சி

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மின்தடை ஏற்பட்டதாகவும் வீட்டு ஜன்னல்கள் அதிர்ந்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதனால் எவரும் காயமடைந்தனரா? ஏனைய பாதிப்புக்கள் எத்தகையன என்பது பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை.

## கிரனெடாவும் பகிஷ்கரிப்பு

(லண்டன்)

காமன்வெல்த் விளையாட்டு விழாவில் கலந்து கொள்வதில்லை என கிரனெடாவும் தீர்மானித்துள்ளது. 49 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ள காமென்வெல்த்தின் விளையாட்டு விழாவைப் பகிஷ்கரித்துள்ள 28வது நாடு இதுவாகும்.

## கிழக்கு மாகாண....

—4-ம் பக்கத் தொடர்ச்சி

டிஷ் இராஜதந்திர நெருக்குதலுக்கு இலங்கை அரசாங்கம் விட்டுக்கொடுக்க வேண்டியது ஆயிற்று. எனவே, உலக செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசககமிட்டி பெனிலொப்பியின் விடுதலை விஷயத்தில் பங்கேற்பது சாத்தியமாயிற்று.

(தொடரும்)

ஈழமுரசு

## பரந்தனில் ஒரே இரவில் நான்கு வீடுகளில் கொள்ளை

(பரந்தன்)

வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாத ஆயுதந்தாங்கியோர் ஒரே இரவில் நான்கு வீடுகளில் கொள்ளை நடத்திச் சென்றனர் இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்றது. இச் சம்பவத்தின்போது முரசுமோட்டைப் பகுதியிலுள்ள ஞானசேகரம், முருகேசு, பரமநாதன், அருளானந்தம் ஆகியோரது வீடுகளே கொள்ளையடிக்கப்பட்டன. நான்கு வீடுகளிலும் நகைகள், கசெற் றேடியோ, ரொக்கப் ணம் உட்பட பலலட்ச ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது வீடுகளில் இருந்தோர் அணிந்திருந்த நகைகளும் கழற்றிச் செல்லப்பட்டனவாம்.

### தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை

# றுக்கிங் புரிவோருக்கு இறுதி எச்சரிக்கை!

# இனிமேல் ஸ்தாபன ரீதியில் நடவடிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் றுக்கிங் என்ற பெயரில் இடம்பெறும் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்தும், இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு இறுதி எச்சரிக்கையாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று விடுத்த அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:-

பல்கலைக்கழகங்களில் நடைபெறும் ''றுக்கிங்'' என்பது மேற்கு ஐரோப்பாவிலேயே தோற்றம் பெற்றது. பிரபுத்துவ சமுதாயத்தின் கேளிக்கைகளுக்காகவும், பொழுது போக்கிற்காகவும் அவர்களால் உருவாக்கப்பட்ட இவ் ''றுக்கிங்'' கிராமப்புற மாணவர்களும், நகர்ப்புற மாணவர்களும் அச்சமின்றி ஒன்று கலப்பதற்காக மேற்கொள்ளப்படும் அன்புத் தொல்லை என்னும் நியாயப்படுத்தலோடு பல்கலைக் கழகங்களில் தொடர்ந்தது மேலைத்தேய ஏகாதிபத்தியத்தின் வழி வந்ததாய் அமைந்த இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே ''றுக்கிங்'' இடம் பெற்று வந்துள்ளது. இந்த வகையில் 1974ல் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே இங்கும் அந்த ''றுக்கிங்'' தொடர்ந்து வருகிறது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட றுக்கிங் தனது அடிப்படை நிலையில் இருந்து மாற்றப்பட்டு இன்று மாணவர் மத்தியிலான வன்முறை அட்டகாசங்களாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று றுக்கிங் என்ற போர்வையில் இடம்பெறுவது முற்று முழுதான வன்முறை அட்டகாசங்களே.

மேலும் இன்று றுக்கிங் என்றபோர்வையில் ஒரு சில தீய சக்திகள் தம் பாலியல் ரீதியான வக்கிரகங்களை தீர்த்துக்கொள்ள முயல்கின்றன. கடந்த முறை றுக்கிங் என்ற போர்வையில் இடம்பெற்ற மோசமான சம்பவங்களை விசாரணை செய்ததில் இருந்து இதனை ஆதார பூர்வமாக நிரூபிக்க முடிந்துள்ளது.

எனவே கடந்த காலங்களில் இடம்பெற்ற இம்மோசமான சகிக்க முடியாத செயற்பாடுகளால் மாணவ மாணவியர் உடலியல், உளவியல் ரீதியாக கடுமையாக பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ் அட்டகாசங்களை தடுக்க பல்கலைக்கழகத்தினால் பல்வேறு முயற்சிகள் காலத்திற்கு காலம்மேற்கொள்ளப்பட்டன. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் பொது மக்களும் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களும் இதற்கெதிரான பிரசுரங்களை வெளியிட்டுறுக்கிங்கை கட்டுப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

மேலும் குற்றவாளிகளாக காணப்பட்டோர்க்கு பல்கலைக் கழக நிர்வாகத்தினால் தண்டனைகள் வழங்கப்படும் போது அவற்றை பல்வேறு அடாவடித்தனமானசெயற்பாடுகள்மூலம் வெற்றிகொண்டு குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதும் றுக்கிங் நடவடிக்கைக்கு எதிரான மாணவர்கள் சக மாணவர்களால் பயமுறுத்தலுக்குள்ளாக்கப் படுவதும் நீண்ட காலமாகத் தொடர்வதால் ஓர் சமூகப் பொறுப்புக்குரிய உணர்வோடு றுக்கிங் என்ற பெயரில் இடம்பெறும் அடாவடித்தனங்களை தடுக்க வேண்டிய கட்டாயமான நிலை எமக்கேற்படுகிறது.

இறுதியாக றுக்கிங் நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்க்கு இன்றைய போராட்ட சூழலில் இவ்வாறான றுக்கிங் போன்ற கோரிக்கைகளை கைவிட்டு போராட்ட உணர்வுடன் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். இம்முறையும் இத்தகைய மிக மோசமான பண்பற்ற எம் கலாச்சாரத்தை சீரழிப்பதுமான செயற்பாடுகள் இடம் பெறின் அவற்றை ஸ்தாபன ரீதியில் எதிர் கொள்வதும் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் எமக்கேற்படும். எனவே றுக்கிங் நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்கள் இதனை உணர்ந்து செயற்படுவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

## காலியில்களைத்த அம்புலன்ஸ் யாழ்ப்பாணம் வந்துள்ளது

பெரும் முயற்சியின் பின் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட பழைய அம்புலன்ஸ் வண்டி எவ்வாறு இங்கு சேவையாற்றப் போகின்றது என அங்கலாய்ப்பு தெரிவிக்கப்படுகிறது.

உயிருடன் போராடும் நோயாளி ஒருவரை அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல உதவுவதற்கே அம்புலன்ஸ் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன ஆனால்போதனா வைத்தியசாலைகள் அமைச்சினால் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு என 'ஒதுக்கப்பட்ட' அம்புலன்ஸ்வண்டியோ கொழும்பிலிருந்து இங்கு வந்து சேருவதற்கு ஐந்து தினங்கள் எடுத்திருக்கின்றது.

புளியங்குளத்திற்கு அருகில் திடீரென பழுதடைந்து தீப்பிடித்துக்கொண்ட இந்த அம்புலன்ஸ் சாரதியினதும் மற்றும் ஊழியர்களினதும் முயற்சியால் வேறு வாகனத்தின் மூலம் கட்டியிழுக்கப்பட்டு இங்கு கொண்டுவந்து சேர்க்கப்பட்டது.

காலி வைத்தியசாலையில் சேவையாற்றி ஒய்வுபெற்ற இந்த அம்புலன்ஸ் யாழ். மக்களுக்கு இந்த இலட்சணத்தில் எவ்வாறு தொல்லையில்லாச் சேவையினை வழங்கப்போகின்றது என்பது தான் பலருடைய அங்கலாய்ப்பாகும்.

## புதிய கப்பல்கள், படகுகள் வடபகுதிகடலில்வந்துள்ளன

(அளவெட்டி)

காங்கேசன்துறைக் கடற்பகுதிக்கு புதிய நவீன ரக பீரங்கி கப்பல்கள் சிறிய கண்போட்டுகள், விசைப்படகுகள் என்பன வந்துசேர்ந்துள்ளன.

முன்னர் இக்கடற்பகுதியில் நின்ற படகுகள், பீரங்கி கப்பல்கள் என்பன, நேற்றுக் காலை காரைநகர் பகுதி நோக்கி நகர்ந்து சென்றதையும், பின்னர் பகல் பத்துமணியளவில் இவ்விடங்களுக்கு மேற்படி புதியவை வந்ததையும் பலர் கண்டனர்.

கறுப்பு, பச்சை, கருநீலம், வெள்ளை ஆகிய வர்ணங்களிலான பீரங்கிக் கப்பல்கள் புதிய வடிவமைப்பைக் கொண்டதாக காட்சி அளிக்கின்றன.

இதேவேளை சிறிய விமானமொன்று இரவு பகல் எவ் வேளையிலும் கடற்கரையோரப் பகுதிகளிலும் கடற் பகுதியிலும் தாழ்வாகப், பறந்து நோட்டம் விட்டுவருகின்றது.

## நல்லூர் மகோற்சவம் ஆகஸ்ட் பத்தில் ஆரம்பம்

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவம் வருகிற மாதம் பத்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஆலய உற்சவத்தை இம்முறை வழமைபோல் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை உற்சவ காலத்தின் போது நல்லூர் இந்து விடுதிக்கு பின்புறமாகவுள்ள காணியிலும், யாழ். மாநகராட்சி மன்ற தீ அணைக்கும்படை அலுவலகத்திற்கு கிழக்குப் பக்கமாகவுள்ள காணியிலும் மட்டுமே தற்காலிக கடைகள் அமைப்பதற்கு அனுமதியக் கபபடுமென மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இம்முறை கோயில் சுற்றுடலில் உள்ள வீதியோரங்களில் கடைகள் அமைப்பதற்கு கண்டிப்பாக அனுமதி வழங்கப்படமாட்டாதென தெரிவித்த ஆணையாளர், எவராவது தங்கள் காணி வேலிகளை கடைகள் அமைப்பதற்காக அகற்றினால் வீதி நிர்ணயச் சட்ட விதிகளின் படியே அவற்றை மீண்டும் அமைப்பதற்கு அனுமதிக்கப் படுமெனவும் தெரிவித்தார்.

## பாரத அரசு என்றும் உதவும்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பாரதம் தொடர்ந்தும் உதவி வழங்கத் தயாராகவிருப்பதாக வெளிவிவகார இணையமைச்சர் திரு. நாராயணன் நேற்று ராஜ்ய சபாவில் தெரிவித்தார்.

## அவர்கள் பணி தொடர்கிறது

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை இராணுவத்தினர் தொடர்ந்தும் முகாமின் மேற்குப் பக்கமாகவுள்ள கட்டடங்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்குகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஊரிக்காடு பகுதியிலுள்ள அரிசி ஆலையொன்று குண்டு வைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டது அதன் பக்கத்திலுள்ள பெரிய வீடு ஒன்றும் தகர்க்கப்பட்டது.

### யாழ். இரத்த...

அவர்களிடமிருந்து இரத்தம் பெறப்படும். பாடசாலை மாணவர்கள், பொதுநல ஸ்தாபனங்கள், மற்றும் பொது மக்கள் இந்த தொண்டர் சேவையில் சேர்ந்து கொள்ளலாம்.

தொண்டர்கள் சிறு, சிறு குழுக்களாக தங்களை அமைத்துக் கொண்டு அவசரத் தொடர்புக்காக வசதியான தொலைபேசி இலக்கங்களையும் தந்தால் உதவியாக இருக்குமெனத் தெரிவித்த இரத்த வங்கி பொறுப்பாளர் டாக்டர் செல்வி ய. ஆறுமுகம், அவசர இரத்த வழங்கல் தொண்டர் சேவையில் சேர்ந்துகொள்ள விரும்புவோர் இன்று முதல் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொண்டு தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என தெரிவித்தார்.

### ஊர்வலமும்...

தாமதம்'', ''முஸ்லிம் மக்களின் ஏகோபித்த குரல் 'தமிழ் ஈழம் ஒன்றுதான்' அதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டு விட்டோம்'', 'இஸ்லாமியஇளைஞர் அமைப்பு புலிகளின் எதிரிகளே'', ''தமிழீழத்தில் அனைவரும் சரிசமமே'' போன்ற கோஷங்கள் காணப்பட்டன.

நேற்று முஸ்லிம்களின் பெரும்பாலான கடைகளும் பூட்டப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

### பருத்தித்துறையில்...

மேற்கொண்டனர்.

ராணுவத்தின் ஷெல்கள் பல இடங்களிலும் விழுந்து வெடித்ததால் பாடசாலைகள், சந்தைகள், அலுவலகங்கள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

ஷெல் தாக்குதலில் காயமடைந்த செல்வி எஸ். சிவகுமாரி (17), ஏ. ரகுராம் (19), தா. பரமேஸ்வரி (27) ஆகியோர் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## முஸ்லீம் இணக்க சபை அறிக்கை

யாழ். முஸ்லீம் இணக்க சபை நேற்றிரவு விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

சாத்வீகமான முறையில் நீதி கோரி நேற்று ஆரம்பிக்கப்பட்ட ஹர்த்தால், ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் மூலம் ஹர்த்தாலின் புனிதத்தன்மை மாசுபடுத்தப்பட்டுள்ளது. தீவைப்பு, வீடுகள், கடைகள் உடைப்பானது அமைதியாக நீதியான தீர்வுக்குக் காத்திருந்த பாதிக்கப்பட்ட மக்களின் நியாய பூர்வமான உணர்வை முஸ்லீம் பொதுமக்கள் மத்தியில் சீர்குலைக்கும் செயலாக அமைந்துவிட்டது. இவை கண்டிக்கப் படவேண்டியவை. இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு யாழ் முஸ்லீம் இணக்கசபையின் சார்பில் அனுதாபத்தை தெரிவிப்பதோடு இவ்வசம்பாவிதம் சம்பந்தமான மேல் முடிவுகள் சபையின் நிர்வாகக் குழு கூடி ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

## புலோலியில் மரண தண்டனை

(பலோலி)

சமூக விரோதச்செயல்களில் ஈடுபட்ட ஒருவருக்கு புலோலியில் வைத்து நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

புலோலி தெற்கைச் சேர்ந்த கே. இரத்தினசாமி என்பவரே இவ்வாறு மரண தண்டனை பெற்றவராவார் நேற்று முன்தினம் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட இவரின் சடலம் நேற்றுக் காலை அவரது வீட்டில் ஒப்படைக்கப்பட்டது. தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த சமூக விரோதச் செயல்களில் இவர் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## அடம்பனில் மரண தண்டனை

(மன்னார்)

அடம்பன் சந்தியில் நேற்றுக் காலை பதினொரு மணிக்கு சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக அரியரட்ணம் அரியராஜா என்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இதனை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## மணலுக்குள்சிக்கி மரணமானார்

(வேலணை, மண்கும்பான்)

மண்கும்பான் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் கல்லுண்டாய் பகுதியில் லொறிமூலம் மணல் ஏற்றிக்கொண்டிருக்கையில் அவர் மணல் எடுத்த மணல் குவியல் அவர் மேல் சரிந்து வீழ்ந்து மூடிவிடவே அந்நபர் அவ்விடத்திலேயே மரணமடைந்துவிட்டார். பின்னர் பலத்த சிரமத்தின் மத்தியில் மணலை அப்புறப்படுத்தி சடலத்தை மீட்டு எடுத்தார்கள். காலஞ்சென்றவர் கிளி (வயது 30) எனப்படுபவராவர்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 23-07-1986 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437